செங்கோல்

ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்

மலர் 12 ★ சென்னை 21-1-62 ஞாயிறு 20 பைசா ★ இதழ் 8

நம் கழகம், தமிழினத்தின் விடுதலை இயக்கம்

பதவி வெறிபிடித்து அலைவோர், தமிழருக்கு விடுதலை தேட முடியாது!

தமிழர் மட்டுமே கூடிக்கொண்டு திராவிடர் விழா கொண்டாடுவதா?

4-1-62 ஞாயிறு மாலை சென்னை அம்மன் கோயில் வட்ட த. அ. க. சார்பில் நடைபெற்ற 'தமிழர் திருநாள்' கூட்டத்தில் ம. பொ. சி. பேசியது இங்கே தரப்படுகிறது.

தமிழ்ப்பெரு மக்களே! பொங்கல் நன்னாளில் – தமிழர் திருநாளில், உங்களிடையே பேசும் வாய்ப்பு கிடைத்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுக்கெல்லாம் பொங்கல் வாழ்த்துக்கள்!

எனக்கு முன்னே பேசிய நண்பர்கள், 'பொங்கல்'-'சங்கராந்தி' என்ற பெயர்களில் கொண்டாடப்பட்ட பண்டிகையை, 'தமிழர் திருநாள்' என்ற பெயரில் தமிழினத்தின் தேசியத் திருநாளாகச் செய்தவன் நான்தான் என்று பெருமிதத்தோடு கூறினர்கள். அது உண்மை என்பதை அடக்க உணர்ச்சியோடு நானும் அங்கீகரிக்கிறேன்.

ஆனல், நான் அந்த மாறுதலைச் செய்ததற்குக் காரணம் யாது? தமிழரெலாம்-சாதி, சமய, கட்சி பேதமின்றி – ஒன்றுபட்டுக் கொண்டாடும் திருநாள் ஒன்று கூட இல்லையே என்று எண்ணி, அப்படி ஒருநாளை ஏற்படுத்த விரும்பி, அதற்கு எந்த நாள் தகுதியுடைய தென்பதை ஆராய்ந்து, இந்தப் பொங்கல் திருநாளைத் தேர்ந்தெடுத்தேன்.

'தமிழர் திருநாள்' எனப் பெயர் கொடுத்து 1946ல் முதன் முதலாக அந்த நாளை இந்த நகரில் கொண்டாடும்படி செய்தேன்.

இன்று,- இதே நேரத்தில் இந்த நகரிலும் தமிழ்நாட்டிலும் தமிழர் குடியேறி வாழும் அயல் நாடுகளிலும் தமிழர் திருநாள் கொண்டாடப் படுகின்றது. ஆனல், தமிழகத்தில் வாழும் ஒரு சாரார், குறிப்பிட்ட ஒரு கழகத்தார் 'திராவிடர் திருநாள்' என மாற்றுப் பெயர் கொடுத்து பொங்கல் திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

தமிழராகிய நாம் தமிழரல்லாத வேற்றினத்தாரோடு சேரும் போதுதான், அல்லது வேற்றினத்தார் நம்மோடுசேரும் போதுதான், 'திராவிடர்' என்றே, 'இந்தியர்' என்றே சொல்ல வேண்டும். நம்மவர் மட்டுமே கூடியிருக்கும் இடத்தில் நாம் தமிழர்தான்.

'திராவிடர்' என்ற பெயரில் விழாக் கொண்டாடுகிறார்களே, அந்த விழாக் கூட்டத்திலே ஆந்திர நாட்டாரோ, கன்னட மாநிலத்தவரோ, கேரளப் பிரதேசத்தாரோ கலந்து கொள்ளக் காணோம். தமிழர் மட்டுமே கூடிக்கொண்டு 'திராவிடர் திருநாள்' கொண்டாடுகின்றனர்.

இந்த விந்தையான நிகழ்ச்சிக்கு வேறு பெயர் கிடைக்கவில்லை.

தமிழகத்தில், தமிழர் மட்டுமே கூடிக்கொண்டு விழா நடத்தும் போதுகூட தங்களைத் தமிழர் என்று கூறிக்கொள்ள மறப்பவர்கள் தமிழ்இனஉணர்ச்சியின் எதிரிகளே யாவர்.

'திராவிடர்' என்ற உணர்ச்சியால் தென்னிந்தியரை ஒரே இனமாக்கும் முயற்சி, இன்றே, நேற்றே துவங்கியதன்று! 'மனோன்மணீயம்' என்ற காப்பியம் இயற்றிய சுந்தரனர், 'திராவிடம்' என்ற பெயரை தம் காப்பியத்தில் சேர்த்தார்.

பின்னர், ஒப்பிலக்கணம் இயற்றிய கால்டுவெல் பாதிரியார் தென்னிந்திய மொழிகள் அனைத்திற்கும் திராவிட மொழிகள் என்ற பொதுப் பெயர் சூட்டினர்.

இன ஆராய்ச்சி நடத்திய கிரியர்சன் துரை மகனர், தென்னிந்தியரைத் திராவிடர் என்று கூறினர்.

அதன் பின்னர், ஆங்கிலப் பேரரசானது நான்கு மொழிப் பகுதிகளை ஒரே ராஜ்யமாக்கி, அதன் மூலம் திராவிட இன உணர்ச்சி வளர, விரும்பியோ, விரும்பாமலோ வாய்ப்பளித்தது.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, ''தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்'' என்ற பெயரால் ''ஜஸ்டிஸ் கட்சி'' தோன்றி திராவிட இன உணர்ச்சியை வளர்க்க முயன்றது.

இந்த முயற்சிகளின் விளைவு என்ன?

தென்னிந்தியாவில் வாழும் சாதாரண மக்களிடையே திராவிட இன உணர்வு ஏற்பட்டதா? இல்லவே இல்லை.

சுந்தரனர் சொன்ன திராவிடம், மனோன்மணீயம் என்ற நாடக நூலுக்குள்ளேயே மறைந்து விட்டது. கால்டுவெல்லும், கிரியர்சனும் கற்பித்த திராவிடம், அவர்கள் யாத்து வைத்துப்போன ஆராய்ச்சி நூலிலேயே அமிழ்ந்துவிட்டது!

பிரிட்டிஷ் பேரரசு சிருஷ்டித்த மாடல் திராவிடம், மொழிவாரி ராஜ்யம் அமைக்கப்பட்டபோதே அழிக்கப்பட்டு விட்டது.

தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் வளர்க்க விரும்பிய திராவிட இன உணர்ச்சி, அந்தக் கட்சி மறைந்தபோதே மாய்ந்து விட்டது.

திராவிடர் என்ற பெயரால் எழுச்சிமிக்க இயக்கம் கண்ட ஈ. வெ. ரா. பெரியார் கூட இப்போது திராவிடர் திருநாள் கொண்டாடுவதில்லை.

இப்படி அழிந்தே போய்விட்ட – ஆரம்ப முயற்சியிலேயே தோல்வி கண்டுவிட்ட, இனி வெற்றி பெறுவதற்கே வாய்ப்பில்லாத திராவிட இன ஒற்றுமை இயக்கத்தை ஏனோ கட்டி அழுகிறது தி. மு. கழகம்.

இந்தப் பொங்கல் திருநாளில், தமிழர் ஒன்றுபட வேண்டிய நன்னாளில் தமிழரிடமிருந்து பிரிந்து நிற்கவென்றே, திராவிடர் திருநாள் கொண்டாடுகிறது தி. மு. கழகம். இதர தமிழர்களிடமிருந்து பிரிந்து வாழ்வதையே கொள்கையாகக் கொண்டுவிட்ட தி. மு. கழகத்தாரால் திராவிடத் தனிநாடு பெற முடியுமா?

ஒரு இனத்தவரின் விடுதலைக்காகப் பாடுபடும் எந்த ஒரு அமைப்பும், முதலில் அந்த இனத்தவரிடையே ஒற்றுமையை உருவாக்கப் பாடுபடவேண்டும். என்ன விலை கொடுத்தேனும், எவ்வளவு உயிர் கொடுத்தேனும், தமிழ் இனத்தை ஒன்றுபடுத்துவது ஒன்றே தி. மு. கழகத்தின் தலையாயகுறிக்கோளாக இருக்க வேண்டும். ஆந்திர-கன்னட–கேரள இனங்களை எலாம் தமிழினத்தோடு இணைக்க விரும்பும் திராவிடர் ஒற்றுமை இயக்கமாக தி. மு. கழகம் இருக்குமானல், குறைந்தபட்சம் தமிழரையேனும் ஒன்றுபடுத்த வேண்டாமா? அத்தகைய ஒரு ஒற்றுமை முயற்சியில் அந்தக் கழகம் வெற்றி பெற்றால்தானே அந்த அடிப்படையில் திராவிட இன உணர்வை வளர்க்க முடியும். தமிழினத்தையே பிளவு படுத்திவிட்ட ஒரு இயக்கம்,

(2ம் பக்கம் பார்க்க)

திராவிடர் ஒன்றுபட, தமிழரைப் பிளப்பதா?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தென்னிந்தியாவிலுள்ள நான்கு மொழி இனங்களையும் ஒற்றுமைப் படுத்தப் போவதாகச் சொன்னல், அதனை நான் நம்ப முடியுமா?

தமிழரசுக் கழகம் தமிழினத்தின் விடுதலை இயக்கம். அதனால்தான், 'தமிழினமே ஒன்றுபடு' என்று நாம் கோஷிக்கிறோம். தமிழினத்தவரை ஒன்றுபடுத்தாதவரை நமது குறிக்கோளாகிய மாநில சுயாட்சியை நாம் அடைய முடியாது. தமிழரை ஒன்றுபடுத்த நினைக்கும் எந்த இயக்கமும் தேர்தலில் போட்டியிடும் கட்சியாக இருக்கக் கூடாது. இருந்தால், தமிழினத்தை ஒன்றுபடுத்த அதனல் முடியாது. இந்த உண்மையை உணர்ந்துதான் தமிழினத்தின் விடுதலை இயக்கமாகிய தமிழரசுக் கழகம் தேர்தலில் ஈடுபட வில்லை.

திராவிட நாடு கோருவதாகச் சொன்னலும், உண்மையில் தமிழ்நாட்டுக்கு விடுதலை தேடவே தி. மு. கழகம் விரும்புவதாக நம்பலாம்.

அப்படியே, நாம் தமிழர் இயக்கமும், தமிழ் தேசியக் கட்சியும் தமிழினத்தின் விடுதலைக்கெனவே தோன்றியதாகச் சொல்லிக் கொள்கின்றன. திராவிடர் கழகமோ அண்மையில் கூடிய தனது மாநில மாநாட்டில் சுதந்திரத் தமிழ்நாடு கோரித் தீர்மானம் நிறைவேற்றியது.

இதிலிருந்து, இந்த நான்கு அமைப்புக்களும் தமிழினத்தின் விடுதலை இயக்கங்களாக வளரவே விரும்புகின்றன. நான் சொல்லுகிறேன், இந்த நான்கு அமைப்புகளாலும் தமிழினத்திற்கு விடுதலை தேட முடியவே முடியாது. இதனை ஆயிரங்கோயில்களுக்குச் சென்று சத்தியம் செய்து சொல்லவும் என்னல் முடியும்.

இந்தக் கட்சிகள் தேர்தலுக்குப் புறம்பாக இயங்கினல் தமிழினத்தை ஒற்றுமைப் படுத்தும் ஆற்றல் அவற்றிற்கு ஏற்படும். தேர்தலில் போட்டியிடும் கட்சிகளாகி விட்டபடியால் ஒன்றை ஒன்று ஏசியும் பேசியும் எதிர்த்தும் தெருச்சண்டை போடுவதைப் பார்க்கிறேன். இதுவா தமிழினத்திற்கு விடுதலைதேடும் வழி?

நேற்றுப் பிறந்த தேசியக்கட்சி தி. மு. கழகத்தை வெறிகொண்டு எதிர்க்கிறது, தேர்தல் களத்திலும்! தி. மு. கழகமோ, தேசியக் கட்சியை மட்டுமன்றி இதர எல்லாக் கட்சிகளையுமே ஒழித்துக் கட்டப் போராடுகிறது. நாம் தமிழர் கட்சி வேறு கட்சி எதனோடும் கூட்டுச் சேர மறுக்கிறது. சுதந்திரத் தமிழ்நாடு கேட்கும் திராவிடக் கழகமோ, பிரிவினையை வெறி கொண்டு எதிர்க்கும் காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் பிரச்சாரம் செய்கிறது. இதுவா தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி, தமிழ் நாட்டுக்கு விடுதலை தேடும் போக்கு?

இந்தக் கட்சிகள் பிரச்சாரம் செய்வதுபோல வடக்கிலிருந்து தென் தமிழ்நாடு பிரிய முடியுமா? மூன்று கோடி தமிழ் மக்களும ஒன்றுபட்டுப் புரட்சி நடத்தினல் கூட பிரிவினை சாத்தியமல்ல. இந்தியாவின் மக்கள் தொகை 43 கோடி. அதில் தமிழர் தொகை 3 கோடிக்கு மேல் இல்லை. எஞ்சிய 40 கோடி மக்களுக்கு எதிராகப் புரட்சி நடத்தி மூன்று கோடி தமிழ் மக்களுக்கு விடுதலை தேடவேண்டும்.

இந்த நிலையில் குறைந்த பட்சம் மூன்று கோடி தமிழர்களேனும் ஒன்றுபட்டால்தானே விடுதலைக்கிளர்ச்சியை வலுப்படுத்த முடியும். தமிழ் இன உணர்ச்சியுடன் செயல்பட மறுக்கிறது ஆளுங்கட்சியான காங்கிரஸ். வெள்ளையன் வெளியேறியதோடு விடுதலைப்போர் முடிந்து விட்டதாகக் காங்கிரஸ் நம்புகிறது. இந்த நிலையில் அற்ப சொற்ப அளவிலேயே சக்தி படைத்த தி. க., தி. மு. க., நாம் தமிழர், த. தே. க. ஆகிய அமைப்புகளேனும் தங்களுக்கு இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் விடுதலை உணர்ச்சியின் மீது ஆணை வைத்து ஒன்றுபட வேண்டாமா?

உண்மை என்னவென்றல், தமிழ் இனத்திற்கு விடுதலை தேடும் கொள்கையிலே அந்த கட்சிகளுக்கு அழுத்தமான நம்பிக்கையில்லை. அதைவிட தேர்தலில் ஈடுபட்டு சட்டசபையில் இடம் பெறுவதிலேயே நாட்டமிருக்கிறது. அதனால்தான் சொல்லுகிறேன், இந்தக் கட்சிகளால் எதையுமே சாதிக்க முடியாதென்று. இப்படி நான் சொல்லுவது, காழ்ப்பாலன்று; ஒற்றுமையில் எனக்குள்ள அழுத்தமான நம்பிக்கையால்.

காங்கிரஸ் மகாசபையின் வரலாற்றைப் படியுங்கள். விடுதலைக்குப் போராடிய காலத்தில் காங்கிரஸ் கட்சி சட்டசபைத் தேர்தலில் ஈடுபடவில்லை. 1936-ம் ஆண்டுக்கு முன்புள்ள காலத்தில் மிண்டோ-மார்லி சீர்திருத்தம், மாண்டேகு-ஜேம்ஸ்போர்டுசீர்திருத்தம்எனஒன்றன் பின் ஒன்ருக பல அரசியல் சீர்திருத்தங்களை வழங்கியது ஆங்கிலப் பேரரசு. ஒவ்வொரு சீர்திருத்தமும் அமுல் நடத்தப்பட்ட போதெல்லாம் வாக்காளர் வட்டாரம் விரிவடைந்து பொதுத் தேர்தலும் நடந்தது. அப்போதும்கூட மக்களிடையே காங்கிரஸ் மகாசபை ஒன்றுக்கே அளவிறந்த செல்வாக்கிருந்தது. இருந்தும் காங்கிரஸ் தேர்தலில் ஈடுபடவில்லை. காரணம், அது பாரத மக்களின் விடுதலை இயக்கமாக இருந்ததுதான்.

ஆதிக்கஞ் செலுத்துவோர் வகுத்த அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்ட ஒரு சட்டசபையின் மூலம் அடிமைப்பட்ட இனம் விடுதலை பெற முடியாது. என்பதையும் தெரிந்து வைத்திருந்தது காங்கிரஸ்.

1936-ல் முதன் முதலாக காங்கிரஸ் மகாசபை சட்டசபைத் தேர்தலில் ஈடுபட்டதென்றல், அதற்குக் காரணம் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிவிட முடியும் என்ற நம்பிக்கைதான். அப்படியே ஆறு மாநிலங்களில் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றவும் முடிந்தது. இது தமிழினத்தின் அல்லது திராவிட இனத்தின்விடுதலைக்கு பாடுபடுவதாக சொல்லிக்கொள்ளும்கட்சிகளுக்கு பாடமாக இருக்கவேண்டும்.

சட்டசபைத் தேர்தலையே நான் வெறுப்பதாக எண்ண வேண்டாம். சட்டசபைக்குச் செல்வதன்மூலம் சுதந்திரத் தமிழ்நாடோ, சுதந்திரத் திராவிடமோ பெற முடியாதென்பதை விளக்கவே இவ்வளவும் கூறினேன்.

சுதந்திர நாடு பெறுவதற்கு ஏதேனும் ஒருவழி இருக்குமானல், அது சட்டசபைக்கு வெளியே மிகப் பெரிய அளவில் புரட்சி நடத்துவதுதான். அத்தகைய புரட்சிக்குத் தயாராக இல்லாத கட்சி விடுதலை இயக்கம் நடத்துவதாகச் சொல்வது வெளி மயக்கே.

சுதந்திரத் தமிழ்நாடு பெறுவது கிடக்கட்டும். இந்தச் சட்டசபைக்குச் செல்வதால் மாநில சுயாட்சியைக் கூடப் பெறமுடியாது. மாநிலங்கள் சுயாட்சி அடைய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதனைத் திருத்தும் அதிகாரம் எந்த ஒரு மாநிலத்தின் சட்டசபைக்கும் இல்லை. பிரிவினை அல்லது பிரியும் உரிமை கோரும் ரீதியில் அரசியல் சட்டத்தைத் திருத்தக் கோரும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு செல்லக்கூட மாநில சட்டசபை அங்கத்தினருக்கு உரிமை இல்லை. இந்தியாவின் தேசிய ஐக்கியம் ஆட்சேபனைக்கிடமில்லாத ஒரு புனிதமான அம்சமாகச் செய்யப்பட்டாகிறது.

அத்தகைய சட்டத்திற்கு விசுவாசப் பிரமாணம் எடுக்கும் ஒரு எம். எல். ஏ. வுக்கு பிரிவினை கோரி தீர்மானம் கொண்டுவர உரிமை ஏது?

பாராளுமன்றத்தையே எடுத்துக் கொள்வோம். அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 495. அதிலே, தமிழக அங்கத்தினர்களின் எண்ணிக்கை 41 தான். அந்த 41ஐயும் தி. மு. கழகம் கைப்பற்றினலும் பாராளுமன்றத்தின் மூலம் திராவிடநாடு பெற முடியாது. பிரிவினை அல்லது பிரியும் உரிமை கோரும் மற்ற கட்சிகளின் நிலையும் இது தான்.

அரசியல் சட்டத்தில் மாநிலங்களுக்குப் பிரியும் உரிமை வழங்க திருத்தம் காணவேண்டுமானல், பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஆதரவளிக்க வேண்டும். ஆனல், மத்திய அரசில் செல்வாக்குப் பெற்றுள்ள இந்தி-குஜராத்தி மொழி பேசுவோரின் எண்ணிக்கை சரி பாதிக்கு மேற்பட்டதாகும். அவர்கள், பிரிவினையையோ அதிகாரங்களைப் பரவலாக்கும் முயற்சியையோ எளிதில் ஏற்கமாட்டார்கள். அவர்கள் ஏற்கவில்லையானல், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கினர் ஆதரவு கிடைக்காது.

இந்த நிலையில், பிரிவினை கோருவோர் அல்லது மத்திய ஆட்சியின் ஆதிக்கத்திலிருந்து தமிழினத்திற்கு விடுதலை தேட முயல்வோர் பாராளுமன்றத்தின் மூலமும் அந்தக் குறிக்கோளை அடையமுடியாது. அதற்கு சட்டசபைக்கு வெளியேதான் புரட்சி நடத்தி ஆகவேண்டும். இந்தச் சூழ்நிலையில் ஏதேனும் ஒரு அரசியல் கட்சி சட்டசபைக்குச் செல்ல விரும்புகிறதென்றல், மக்களுடைய அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளை தேர்தல் பிரச்னையாக்கியே அது போட்டியிட வேண்டும். அத்தகைய போட்டி வரவேற்கத் தக்கதுமாகும்.

ஆனல், அந்தப் போட்டியின் விளைவு என்ன? தமிழ் இனத்தவரிடையே கட்சிப் பிரிவும், பூசலுமே யாகும். ஒரு ஜனநாயக நாட்டில் அவை தவிர்க்க முடியாதவை என்றலும் ஒரு இனத்தின் விடுதலைக்குப் பாடுபடும் இயக்கம் எதுவும் தன்னை ஒரு தேர்தல் கட்சியாக்கிக் கொண்டு மக்களிடையே பூசலை வளர்க்கப் பொறுப்பேற்கக் கூடாது. மக்களிடையே விடுதலை ஆர்வத்தை வளர்ப்பதில் வெற்றி கண்டுவிட்டால், சட்டசபையில் எந்தக் கட்சி இருந்தாலும் விடுதலைக் கிளர்ச்சிக்கு எதிராக அது செயல்பட முடியாது, சட்டசபையில் ஒரு அங்கத்தினரைக் கூடப் பெற்றிராத தமிழரசுக் கழகம், தான் நடத்திய ஒவ்வொரு கிளர்ச்சியிலும் வெற்றிக் கொடி உயர்த்தவில்லையா?

தமிழரசுக் கழகம் தேர்தலில் போட்டியிடும் கட்சியாக மாறியிருந்தால் அதனல் எதையுமே சாதித்திருக்கமுடியாது. வேண்டுமானல், சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் நம்மில் சிலருக்குப் பதவி தேடிக்கொடுத்திருக்கலாம்.

தமிழ்ப்பெரு மக்களே! நான் கூறியவற்றை எல்லாம் நினைவில் கொண்டு பாருங்கள். தமிழருக்கு விடுதலை தேடப்பாடுபடும் ஒரே இயக்கம் சட்டசபைக்குச் செல்லாத தமிழரசு இயக்கம் தான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

திராவிடர் கழகம் சட்டசபைக்குச் செல்லாத கட்சிதான் ஆனலும், அதுகூட தமிழினத்திற்கு விடுதலை தேட முடியாது. காரணம் அதன் சமய-சமூகக் கொள்கைகள் அப்படி!

(7ம் பக்கம் பார்க்க)

முதன் முதலில் நடந்த சிப்பாய் கிளர்ச்சி வேலூரில் துவங்கிய ராணுவப் புரட்சியே!

வேலூர் பற்றிய பழமொழிகள் அதன் பெருமைக்கான சான்றுகளே!

திரு. வே. கி. குப்புசாமி வரவேற்புரை

தமிழரசுக் கழக நான்காவது மாநில மாநாட்டில் வரவேற்புத் தலைவர் வே. கி. குப்புசாமி நிகழ்த்திய வரவேற்புரை:

மாநாட்டுத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்களே! பிரதிநிதிகளே! பார்வையாளர்களே! உங்கள் அனைவரையும், வடாற்காடு மாவட்டத்தின் சார்பிலும், வரலாற்றுச்சிறப்புமிக்க வேலூர் நகரத்தின் சார்பிலும் கனிந்த உள்ளத்துடன் வருக, வருக என கைகூப்பி வரவேற்கிறேன்.

இந்தியாவின்-சிறப்பாக தமிழகத்தின் அரசியல் வரலாற்றிலே, எங்கள் வடாற்காடு மாவட்டத்திற்கும், தலையிடமான வேலூர் நகரத்திற்கும் எத்தனையோ தனிச் சிறப்புக்கள் உண்டு.

விடுதலைப் போரில் சிறந்த, பெருமை மிக்க நிகழ்ச்சியாகிய சிப்பாய்ப் புரட்சியின் துவக்கம் 1806-ம் ஆண்டிலே இந்த வேலூர் நகரத்தில், இதோ நமக்குப் பின்புறமாக அமைந்துள்ள மகத்தான கோட்டைக்கு உள்ளும் புறமுமாகவே நிகழ்ந்தது. ஆம்; தேசபக்த சிப்பாய்களுடைய பிணங்கள் புரண்ட, அவர்கள் செந்நீரால் நனைந்த மைதானத்தில் நாம் கொட்டகை அமைத்துக் கூடியிருக்கிறோம்.

வீரன் திப்புசுல்தானின் திருப்புதல்வர்களை மண்வெறி பிடித்த பறங்கி இராணுவத்தார் அடைத்து வைக்கப்பட்ட இடம் இந்தத் திடலிலே உள்ள கோட்டைதான்!

இந்த நகருக்குச் சிலேடைப் பொருள் கொண்ட பழமொழிகள் பல உண்டு. அவை வருமாறு:

ஆறுண்டு, நீரில்லை;
கோயிலுண்டு, சிலையில்லை;
கோட்டையுண்டு, அரசில்லை;
கண்டோன்மெண்ட் உண்டு, பட்டாளம் இல்லை;
போலீஸ் உண்டு, அதிகாரமில்லை

இவை, பாரதம் முழுவதும் அறிந்த பழமொழிகளாகி விட்டன. உண்மைதான். ஆனல், வரலாற்றை ஆராயுமிடத்து, இந்தப் பழமொழிகள் வேலூர் நகரத்தின் பெருமையைக்குறைத்து விடவில்லை என்பது புலனுகும்.

'ஆறிருந்தும் அதில் நீர் வரவில்லை'யென்றல், காரணம், வரட்சியல்ல. கன்னடத்தார் ஆற்று நீருக்கு அதன் போக்கில் ஓட சுதந்திர மளிக்காமல், தலைப்பிலேயே நீரைத் தடுத்து விடுவதுதான்.

அப்படியே 'கோயிலுண்டு சிலையில்லை' யென்றல், சிலையில்லாத கோயிலை வேலூர் மக்கள் விரும்புகிறார்கள் என்று பொருளில்லை. எப்போதோமண் வெறியோடு கலந்த மதவெறி சிலையை அகற்றி வெறுங்கோயிலாக்கியது. அந்தக் கொடுமையை மக்கள் எதிர்த்து மீண்டும் தெய்வச் சிலையை நிறுத்த விரும்பினலும் மத்திய அரசு அனுமதி தர மறுக்கிறது.

'கோட்டையுண்டு அரசில்லை' யென்பது, உண்மையானலும் அதற்காக வேலூர் தமிழர்கள் வெட்கப்படத் தேவையில்லை. கோட்டை தமிழகத்தின் கல்லைக் கொண்டு, தமிழினத்தாரின் உழைப்பைக்கொண்டு கட்டியது ஆதலால், கோட்டை எஞ்சிநின்றது. ஆனல் அதற்குள்ளே இருந்து அழிந்துபோன அரசு, தமிழர் அமைத்த தமிழைக் கொண்டு நடந்த அரசன்று. கோட்டைக்குள்ளே யாரோ இருந்து ஆண்டார்கள். பின்பு யாரோ வந்து அவர்களை அழித்தார்கள். ஆண்டவர்களும், ஆட்சியை அழித்தவர்களும் தமிழரல்ல. ஆதலால் வேலூர் தமிழர்கள் வேடிக்கை பார்த்தனர், மீண்டும் மன்னராட்சி தோன்றக் கூடாது ஆதலால், வேலூர் கோட்டை, வேற்றரசர்கள் ஆண்டதை, பின்னர் அவர்கள் அழிந்ததை நினைப்பூட்டும் வெறும் ஞாபகச்சின்னமாகி விட்டது. அந்நிய ஆதிக்கங்கள் அழிந்துபட்ட இடம் என்பதால், இந்த வெறுங் கோட்டை கூட வேலூர் நகரின் பெருமையை விளக்கி நிற்கிறது.

'கண்டோன்மென்ட்' இருந்தும் இங்கு ராணுவம் இல்லை யென்றல், அது வேலூர் நகரின் தனிக்குறையல்ல. இராணுவம் வைத்துக் கொள்ள நம் தாயகமான தமிழகத்திற்கே உரிமையில்லாத போது, வேலூருக்கு இல்லாதது குறித்து நாங்கள் வெட்கப் படுவானேன். 'ராஜ்யம் உண்டு, ராணுவம் இல்லை' என்பதுதானே தமிழகத்தின் நிலை!

'போலீஸ் இருந்தும் அதிகாரமில்லை' யென்பது அறைகுறையான உண்மைதான். அதிகாரத்தோடு கூடிய போலீசும் உண்டு. அதிகார மில்லாமல் பயிற்சி பெறும் போலீசும் உண்டு. அவர்கள்கூட பின்னல் அதிகாரம் பெற்றுவிடுகிறார்கள். அதிகார மில்லாத போலீஸ் என்பதை விட, மக்களை அச்சுறுத்தாத போலீஸ் என்றே, மக்கள் கண்டு அஞ்ச வேண்டிய அவசியமில்லாத போலீஸ் என்றே கூறி நீங்களெலாம் எங்கள் வேலூர் நகரைப் பெருமைப் படுத்தலாமே!

இந்தப் பழமொழிகள் எந்தப் பொருளுடன் வழங்கப் பட்டாலும், அவை வேலூரின் தனித்த சிறப்புக்களை விளக்குவனவாகும்.

1919க்குப் பிறகு, இந்திய விடுதலை இயக்கம் ஏழை எளியவர்களின் பாசறையாக மாறிய போது; இந்த மாவட்டத்திலே தான்-குறிப்பாக, வேலூர் நகரிலேதான் ''பிரச்சார பீரங்கிகள்'' என்று சொல்லத்தக்க பிரச்சாரகர்கள் பலர் தோன்றினர். அந்த தேசபக்தர்கள் பட்டியலிலே திருவண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை, ஜமதக்கினி, குப்புசாமி முதலியார், சீனிவாசராவ், ராணிப்பேட்டை கலியாணராம் ஐயர், ஆக்கூர் அனந்தாச்சாரியார் போன்றவர்கள் உண்டென மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் மொழியிலே புலமை பெற்றவர்கள் இந்த மாவட்டத்திலே பலர் உண்டு. குறிப்பாக டாக்டர். மு. வரதராசனர் இந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்தான்.

இத்தனை பெருமைகளுக்கும் இடையே அவற்றிற்கெல்லாம் சிகரம்போல தமிழரசுக் கழக மாநில மாநாடு முதன் முதலாக இங்கே நடைபெறுகிறது. அதிகாரத்தில், செல்வச் சிறப்பில், அங்கத்தினர் எண்ணிக்கையில் தமிழரசுக் கழகத்தையும் மிஞ்சுகின்ற அரசியல் கட்சிகளின் மாநில மாநாடுகள் இதே மைதானத்தில் முன்னர் நடந்திருக்கின்றன. ஆனல், கட்சிவேற்றுமையின்றி தமிழர் எல்லோருக்கும் உரிய தேசிய அமைப்பு என்ற பெயரால் இந்த வேலூர் நகரில் ஒரு மாநில மாநாடு நடந்தது என்று சொன்னல், நாம் நடத்திக் கொண்டிருக்கும் தமிழரசுக் கழக மாநில மாநாடுதான்.

இதே கோட்டைத் திடலில் முன்னொரு சமயம், அறத்தின் வடிவமான, அகிம்சையின் மூர்த்தியான, தன்னலங் கருதாது பாடுபட்ட தயாநிதியான காந்தியடிகள் நின்று பேசினர். அந்தப் புண்ணியர் நின்ற இந்தப் புனிதமான இடத்தில், அவரது குரலை நமக்கு எதிரொலித்துக் கொண்டிருக்கும் தமிழகத்து காந்தியென நல்லோர் எல்லோருமே கூறிவரும் நமது அருமைத் தலைவர் ம. பொ. சி.யின் தலைமையில் இந்த மாநாட்டை நடத்துகின்றோம். இந்தச் சிறப்பினை எண்ணும்போது என் இதயத்தில் மகிழ்ச்சி துள்ளுகிறது. இத்தனை பெருமை வாய்ந்த மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவனாக இருக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தமைக்கு பெருமையும் பெருமிதமும் அடைகின்றேன்.

இந்த மாநாட்டுக்குள்ள மற்றொரு சிறப்பு, இங்கு உருவாக்கப்படும் தீர்மானங்களை தேசம் முழுவதுமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. எல்லா கட்சிகளும் தங்கள் காதுகளை வேலூர் பக்கம் திருப்பி இந்த மாநாட்டின் தலைமை உரையை, அதன் நுண்பொருளை கேட்கக்காத்திருக்கின்றன. ஆகவே நான் அதிகநேரம் பேசி தலைமை உரையை தாமதப் படுத்த விரும்பவில்லை.

இந்த மாநாட்டை வேலூரில் நடத்த வேண்டுமென்று தலைவர் ம. பொ. சி. எங்களைக் கேட்டபோது, நானும் நகர தமிழரசுக் கழக நிர்வாகிகளும் இசைவு தெரிவிக்க அஞ்சினேம். இவ்வளவு பெரிய ஒரு மாநாட்டை நடத்தி எங்களுக்கு அனுபவம் இல்லை. ஆயினும் தலைவர் தந்த உற்சாகத்தால் துணிவு பெற்று பொறுப்பேற்றோம்.

எங்கள் ஏற்பாடுகளில் குற்றங் குறை உண்டென்று நாங்களே அறிவோம். நம் குடும்ப நிகழ்ச்சி என்ற உணர்ச்சியால், குறைகளையெலாம் பொறுத்தருளுமாறு தலைவர்களையும் பிரதிநிதிகளையும் வேண்டுகின்றேன். பெருமைக்குரிய இந்த மாநாட்டை நடத்தும் பொறுப்பை வேலூர் நகரக் கழகத்திற்கு வழங்கியதற்காக தலைமைக் கழகத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை. வேலூர் நகரம் சம்பந்தப்பட்ட இரண்டு பிரச்னைகளை மட்டும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழகத்தாரே அன்றி, பாரத மக்கள் அனைவருமே பெருமைப் படத்தக்க வகையில் பிரிட்டிஷ் ராணுவத் தளபதிகளை எதிர்த்து புரட்சி நடத்தி, தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் புரிந்த வீர சிப்பாய்களுக்கு சிறப்பு செய்யும் வகையில் இந்நகரில் இதுவரை ஞாபகச்சின்னம் அமைக்கப்படவில்லை. பாரதத்தை அடிமை கொண்ட பிரிட்டிஷ் ஆட்சி, நம

[7ம் பக்கம் பார்க்க]

செங்கோல்

21-1-62 ★ ஞாயிறு

கேரளம் வழி காட்டுகிறது

முன்னர் புது டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாடு, கல்வித் திட்டத்தில் மும்மொழிக் கொள்கையை எல்லா மாநிலங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவர முடிவெடுத்தது. அந்த முடிவை தேசிய ஒருமைப்பாடு மாநாடும் ஏற்றுக்கொண்டது. அந்த முடிவுக்கு முன் கூட்டியே வழிகாட்டிய பெருமை தமிழகத்திற்கே உரியதென்று கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம் பெருமைப் பட்டுக் கொண்டார். ஏனெனில், இம் மும்மொழித் திட்டம் ஏற்கனவே தமிழகத்தில் நடைமுறையிலிருந்து வருகிறது. ஆனல், மற்ற மாநிலங்கள் தமிழகத்தை அப்படியே பின்பற்றுவதாகத் தெரியவில்லை. ஏன்? முதலமைச்சர்கள் மாநாட்டின் முடிவுகூட, தமிழகத்தின் கல்வித் திட்டத்தை அப்படியே எதிரொலிப்பதாகச் சொல்வதற்கில்லை. குறிப்பாக, அந்நிய மொழி விஷயத்தில் பிரத்தியட்ச நோக்குடனும், அறிவு வளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையிலும் மும்மொழிக் கல்வித் திட்டத்தை அறிவித்திருக்கிறது கேரளம்.

கேரளத்தின் மும்மொழித் திட்டம் கடந்த வாரத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது. அதன்படி, உயர்நிலைப் பள்ளிகளுக்கான பாடத் திட்டத்தில் கேரள மொழி முதல் இடம் பெறுகிறது. அடுத்த இடம் இந்திக்கு அல்லது சிறுபான்மையினரின் மொழிக்கு அளிக்கப்படுகிறது. மூன்றாவது இடம் ஏதாவதொரு அந்நிய மொழிக்கு அளிக்கப்படும் என்று புதிய திட்டம் அறிவிக்கின்றது. ஆம், மூன்றாவது மொழி விஷயத்தில் தமிழக அரசோடு மாறுபடுகிறது கேரள அரசு. தமிழகத்தில் மூன்றாவது மொழியாக ஆங்கிலம் ஒன்றைமட்டுமே பயில வாய்ப்பு தரப்படுகிறது. அது ஒன்றுமட்டுமே மூன்றாவது கட்டாய மொழி! இதிலுள்ள தவறை-கேட்டை, முன்னர் எத்தனையோ முறை நாம் எடுத்துக்காட்டியிருக்கிறோம். அமெரிக்கா, சோவியத் ருஷ்யா போன்ற நாடுகளில் உலக மொழியாக ஒரே ஒரு மொழி மட்டுமே பயிற்றுவிக்கப்படவில்லை. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மூன்று மொழிகளைப் பிரதானமாகக் கொண்டு அவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயில வேண்டு மென்பதே கல்வித் திட்டம். இதற்கு நேர்மாறாக, தமிழகத்தில் அந்நிய மொழிக்குரிய இடம் ஆங்கிலமொழி ஒன்றுக்கே அளிக்கப் பட்டிருக்கிறது. இதனல் ஏற்படும் நஷ்டத்தை தலைவர் நேருவின் கருத்தைக் கொண்டே காட்டுவோம்:

> ''உலக நிகழ்ச்சிகளோடும் உலகக் கருத்துக்களோடும் தொடர்பு வைத்துக்கொள்ளும் பொருட்டு,நம்மில் பலர் அந்நிய மொழியைக் கற்றுக் கொள்ளுவது அவசியமாகும். ஆங்கில மொழியைத் தவிர பிரெஞ்சு, ஜெர்மன், ருஷ்யன், ஸ்பானிஷ், இத்தாலியன் மொழிகளைக் கற்றுத்தரும்படி நமது பல்கலைக் கழகங்கள் ஏற்பாடு செய்யவேண்டு மென்பது என் ஆசையாகும்.
>
> ஆங்கில மொழியை அலட்சியம் செய்ய வேண்டுமென்று இதற்கு அர்த்தமல்ல; ஆனல், உலகத்தைப் பற்றி சரியான பார்வை நமக்கு இருக்க வேண்டுமானல் நாம் ஆங்கிலக் கண்ணாடி கொண்டு மட்டும் பார்க்கக் கூடாது. ஏற்கனவே ஆங்கில மொழியை மட்டுமே கற்றுக் கொண்டு பிரிட்டிஷாரின் கருத்துக்களையே நாம் ஏற்றுக் கொண்டதால், நாம் நம்முடைய மனப்பான்மையில் ஒரு பக்கமாக சரிந்து கொண்டே போய் விட்டோம். இந்தியா சம்பந்தமாக எல்லாவற்றையும் பிரிட்டிஷ்பார்வையைக் கொண்டு தான் பார்க்கிறீர்கள் என்பதை நம்முடைய தேசியவாதிகளில் தீவிரமானவர்கள் கூட உணர்வதில்லை.''

என்று பண்டித நேரு தம் ''சுய சரிதை''யில் கூறுகின்றர். ஆம்; பாடத் திட்டத்தில் அந்நிய மொழிக்குரிய இடத்தை ஆங்கிலம் ஒன்றுக்கே அளித்து அந்த மொழியின் துணை கொண்டே உலகத்தைப் பார்ப்பதால் நம்முடைய அறிவாளிகள் பார்வை ''பிரிட்டிஷ் பண்பு'' பெற்று விட்டது என்கிறார் நேரு. இதனை, நேருவின் சீடரான தமிழகத்துக் கல்வியமைச்சர் படித்திருக்க வேண்டும். ஆனல் நடைமுறையிலிருக்கும் கல்வித் திட்டம் நேருவின் இந்தக் கருத்தைப் பிரதிபலிக்க வில்லை.

பிரெஞ்சு, ஜெர்மன், ருஷ்யன் மொழிகளில் வெளிவரும் இலக்கிய - விஞ்ஞான – அறிவு நூல்களை, அந்த மொழிகளிலிருந்தே நேரடியாக மொழி பெயர்த்துக் கொடுப்பதற்கு இப்போது நம்மிடையே 'அறிஞர்கள்' இல்லை. ஆங்கில மொழி பெயர்ப்பு வெளியான பிறகு அதிலிருந்து இந்திய மொழிகளுக்குக் கொண்டு வரும் வழக்கமே இருந்து வருகிறது. அதனல் முதல் நூல்களுக்குரிய பண்பு திரிந்து மொழி பெயர்க்கும் இனத்தவரின் பண்பே நம் இதயத்தில் இடம் பெறுகிறது. அதில் உலக விஷயங்களில் நாம் ஒரு பக்கமாக சரிந்து விட்டோம் என்று நேரு கூறுவது முற்றிலும் உண்மை. ஆட்சிக்கும், நீதி மன்ற நிர்வாகத்திற்கும், பல்கலைக்கழகப் பாடத்திற்கும் தமிழ் மொழியையே பயன்படுத்துவதென்ற முடிவுக்கு வந்த பிறகு, அந்நிய மொழிக்குரிய இடத்தை ஆங்கிலம் ஒன்றுக்கே அளிக்கவேண்டிய அவசியம் என்ன? அறிவு மொழியாக மட்டுமே ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதென்றல், படித்தவர்களிலே சிலர் மட்டுமே பயின்றல் போதுமே! மற்றும் சிலர் பிரெஞ்சு மொழியையும், இன்னும் சிலர் ருஷ்ய மொழியையும், வேறு சிலர் ஜெர்மன் மொழியையும் பயிலலாமே! அதுதானே உலகத்தைச் சரியான முறையில் அறிந்து கொள்வதற்கான வழி. இந்த உண்மையை நன்கு உணர்ந்தே மூன்றாவது மொழிக்குரிய இடத்தில் 'ஏதேனுமொரு அந்நிய மொழியைப் பயிலலாம்' என அறிவித்திருக்கிறது கேரள அரசு. அந்த வகையில் சகோதர மாநிலங்களுக்கெல்லாம் வழி காட்டிய பெருமையைக் கேரளம் தட்டிக் கொண்டு விட்டது. அதைப் பார்த்த பிறகேனும் தமிழக அரசினர் தமது கல்வித் திட்டத்தைத் திருத்தியமைப்பார்களென்று நம்புகிறோம்.

வருந்துகின்றேம்

இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் அஜாய் கோஷ் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். பாரதத்தில் பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் அஜாய்கோஷ் மறைந்தது கம்யூனிஸ்டுக் கட்சிக்கு மகத்தான நஷ்டமாகும். பார்லிமெண்டரித் துறையில் சிறந்து விளங்கிய தலைவர் என்ற முறையில் அஜாய்கோஷ் மறைவு இந்தியாவுக்கு ஏற்பட்ட செய்ய முடியாத இழப்பு என்று சொல்லலாம்.

தமிழகம் வரவிருந்த நேரத்தில் அவர் ஆவி நீத்தது தமிழ் மக்களுக்கு வருத்தம் தரக்கூடியதாகும். சோஷலிச சமுதாய அமைப்பிற்காகத் தன்னலமின்றிப் பணிபுரிந்த பெருந் தலைவரும் முற்போக்குத்தன்மை வாய்ந்த அரசியல்வாதியுமான அஜாய்கோஷ் அவர்களின் ஆவிக்கு தமிழரசுக் கழகத்தின் சார்பில் அஞ்சலி செலுத்துகின்றேம்.

தமிழர் வாழ, தமிழ் வளர்ப்போம் வாரீர்!

தமிழுணர்ச்சி பெருக்கெடுத்தோடுகிறது; அதனைப் பயன்படுத்தத் திட்டம் வேண்டும்!

மறை. திருநாவுக்கரசு பெருமுழக்கம்

[வேலூர் மாநாட்டில், 20-1-62ல் இலக்கிய மாநாட்டைத் துவக்கி வைத்து மறை. திருநாவுக்கரசு நிகழ்த்திய சொற்பொழிவு:]

கல்லறிவு சான்ற புலமைச் சான்றோர்களே! இலக்கிய இன்பங்காணும் அன்பர்களே! வணக்கம். தமிழினம், தமிழ்மொழி, தமிழிலக்கியம் இவற்றின் வளமான வாழ்வுகோரி உண்மைத் தொண்டாற்றி வருவது நம்மருமைத் தமிழரசுக் கழகமாகும். அதன் சார்பில் நடைபெறும் இவ்விலக்கிய மாநாட்டினைத் திறந்து வைக்கும் பேற்றினை அக்கழகத் தலைமைக்குழு எளியேனுக்கு வழங்கியுள்ளது.

''தமிழ் தன் உரிமையோடு வளமாக வாழ்தல் வேண்டின் 'தனித்தமிழ்' வயலே அதற்கு ஏற்றவிடமாம்'' என்று கொடி கட்டி வெற்றிகண்டவர் எந்தையார் மறைமலையடிகளாவர். அப்பெரும்புலவரின் அரிய தமிழ்த் தொண்டினைப் போற்றுதற்குப் போலும் அவர்தம் மகனை எனக்கு இப்பெரும் பேற்றினை அக்குழு வழங்கியுள்ளது. நன்றி வணக்கம்.

அவையோர்களே! பொதுவாக இலக்கிய மாநாடு என்று குறிப்பிட்டுள்ள இம்மாநாடு தமிழ் இலக்கிய நல்வாழ்விற்கான சிறப்பு மாநாடென்றே நம் மனேரால் கருதப்படுகின்றது என்பதனையான் உணர்கின்றேன். ஆதலின் இத்திறப்புரையில் இலக்கியத்தின் சிறப்புக்கள், அதன் இன்றைய நிலை, எதிர்கால நலம் பற்றியெல்லாம் எண்ணுதல், எண்ணி முடிவு செய்யப்பட்ட கருத்துக்களை செயலாக்குதல் முதலியன பற்றி ஒரு சில கூறவேண்டுங் கடமையுடையேன்.

இன்று 'தமிழ் – தமிழ்' என்ற ஆர்வமும், முழக்கமும் எம்மருங்கும் ஒலிக்கக் காண்கிறோம். அவ்வொலி வெற்றாரவாரமாகி விடக்கூடாது. பண்டைத் தண்டமிழ் இலக்கியங்களைப் படித்தின்புறுதலும், அவற்றைப் பரப்புதலிலும் நமக்கு ஊக்க மூட்டுவதாக அமைதல் வேண்டும். இவ்விலக்கியங்களிற் கண்ட உண்மைகளையும், உலப்பிலா இன்பங்களையும் உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும். இதுவே இம்மாநாட்டின் குறிக்கோளாகவும், தொண்டாகவும் அமையும் எனக் கருதுகின்றேன்.

தமிழிலக்கியங்கட்கு நேர்ந்த அவலநிலை

உரிமை உணர்வு கொண்ட பெரியோர்களே! இன்று வந்த ஆங்கில நல்லரசைக் கைப்பற்றிக் கொண்டு ஆட்சியை ஆங்கிலத்தில் நடத்தவில்லையா? நம்மூர்களில் எங்கு நோக்கினும் ஆங்கில எழுத்துக்களும், தொடர்களுங்காணப் படுகின்றனவே. இன்றும் நம்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், ஆங்கிலந்தானே ஆட்சிமொழி! கலைகளைப் பயிற்றுவிக்கும் மொழியும் ஆங்கிலந்தானே! இவை மட்டுமா? நம் கையெழுத்துக்களும், முன்னெழுத்துக்களும் ஆங்கிலந்தானே! உரிமை பெற்ற நம் நாட்டில் இன்றும் ஆங்கில ஆக்கங்கோரி ஆரவாரங்கள் எங்கும் மிகுந்துள்ளனவே! பச்சைக் குழந்தையுந் தாய் மொழியைக் கற்காவிட்டாலும் ஆங்கிலங் கட்டாயமாகப் படிக்க வேண்டுமே!

இதனல் நேர்ந்த கொடுமைகளையும்,அழிவிழிவுகளையும் எழுதவும் பேசவும் ஆயிரம் ஆயிரம் ஏடுகளும், மணிகளும் வேண்டுமே! எதற்காக இதனைச் சொல்கின்றேன் என்றல் சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்வந்த ஆரியமாய வடமொழி நம்திருக் கோயில்களைக் கைப்பற்றிக் கொண்டதே! அங்கு இறைவன் முன் ஓதவும், போற்றவும் (அர்ச்சிக்கவும்) தமிழ் தகுதியற்றதாகிவிட்டதே! இன்னும் இன்றும் நம் திருமணங்களிலும் சாவிலுங்கூட நம் தமிழ் மொழிக்கிடமில்லையே! மந்திர சக்தி வடமொழிக்குத் தானே தமிழுக்கில்லையே! ஐயகோ! என்ன கொடுமை! என்ன அவமானம்!

செந்தமிழில் இனிய பாடல்கள் இலட்சக் கணக்கிலிருக்க நம் சென்னை, திருச்சி வானொலிகளும், சங்கீத வித்வத் சபைகளும் தெலுங்குப் பாடல்களையும், வடமொழிப் பாடல்களையும் இந்திப் பாடல்களையும் ஏராளமாக ஏற்றுப் போற்றிப் பரப்பக் காரணமென்ன? ''இனிய-நல்ல செந்தமிழ்ப் பாடல்களே தமிழர்க்குப் பயன்தருவன-வேண்டும்'' என்றல், உடனே அப்படிக் கேட்பவரைத் 'தமிழ் வெறியர்' என்று அடிமைப் பத்திரிகைகளும், தமிழ்ப் பகைவர்களும் ஏசுகிறார்களே! இன்று அவர்கட்குத்தான் ஆக்கமான காலம்!

இங்ஙனம் அரசியல்-பள்ளி கல்லூரிகளில் – ஆங்கிலம், இந்தி. கோயில்களில் வாழ்க்கை சடங்குகளில்-வடமொழி; பாடல்கள் தெலுங்கில் என்றமைந்து விட்டதால் செந்தமிழிலக்கியங்களால் பயன் கொள்வார் யார்? தமிழர் தன்மான உணர்ச்சியும், இனஉணர்ச்சியும் என்னுவது? அறிவுவளர்ச்சி தான் எங்ஙனங் கைகூடும்?

ஆயிரம் ஆண்டுகட்கு மேல் வடமொழியின் ஆதிக்கம், இரு நூறுண்டுகளாகத் தெலுங்கு ஆதிக்கம். ஒரு நூற்றுண்டாக ஆங்கில ஆதிக்கம். இனி இந்தி ஆதிக்கமும், தேவநாகரி ஆதிக்கமுந்தான். இப்படி நேர்ந்தால் தமிழிலக்கியங்களைப் படிப்பார் யார்? போற்றுவார் யார்?

வடமொழியாக்கத்தால் வட சொற்கள் ஏராளமாய்க் கலந்து நம் தமிழ்மொழி ஒன்றே மலையாளம், ஆந்திரம், கன்னடம் முதலிய பிற மொழிகளாக மாறித் தமிழ் நிலம் சுருங்கிவிட்டதே. தமிழர்களே தெலுங்கர், கேரளர், கன்னடர் என்று வேற்றினத் தவர்களாகி விட்டனரே! அவரெல்லாரும் தம் முன்னோர்களின் தமிழ் மொழியையும், இலக்கியங்களையும் இழந்துவிட்டனரே!

அதுபோலத்தான், இன்று ஆங்கில மோகர்களால் தமிழில் ஏராளமான ஆங்கிலச் சொற்களும், தொடர்களும், மரபுகளுங் கலக்குமாறு செய்யப்படுகின்றனவே! பல்கலைக் கழகங்களோ தாய்மொழியின் ஆக்கத்தை எதிர்க்கும் கோட்டைகளாய் விளங்குகின்றனவே! அங்குள்ளார்க்குத் தமிழில் பேசக்கூடத்தெரியாதே! பேசத்தொடங்கிவிட்டால் ஆங்கிலத்தில் இடையிடையே தமிழைக் கொலை செய்கின்றனரே! இன்று மேல் வட்டாரங்களில் அடிமை உணர்வு கொண்டவர்கள்-தமிழ்ப் பகைவர்கள் ஆட்சியிலுள்ளனரே! இது தமிழர் நாடா? ஆங்கிலேயர் நாடா? என்ன இழிவு! அடிமைத்தனம்!

வடமொழியால் தமிழுக்கு நேர்ந்த அழிவு இழிவுகளைக் கண்ட பின்னரேனும் ஆங்கில மோகர்கட்கு அறிவு வரவில்லையே! வரவில்லையே! ''ஆங்கில எழுத்துக்களே-மொழியே அறிவு'' என்று திரியும் இவ்வடிமை மோகர்களால் இன்று நூற்றுக் கணக்கான-ஆயிரக் கணக்கான தமிழ்ச் சொற்கள் அழிக்கப்பட்டன. அழிக்கப்படுகின்றன. இலைகளை எல்லாம்-கிளைகளை எல்லாம் பிய்த்தெறிந்துவிட்டால் மரமேது? தமிழ்ச் சொற்களையுந் தொடர்களையும் அழித்துவிட்டால் தமிழேது? பின் தமிழிலக்கியங்கள் தாம் நிலைக்குமா? வாழுமா?

நம் தமிழக அரசும், சிறப்பாக நிதி அமைச்சரும் ஓரளவு தமிழ் மொழிக் குரித்தான இடத்தை அளிக்க முன்வந்தனர். ஆனல், ஆங்கில மோகர்கள் அதனை முறியடிக்க முனைந்து வேலை செய்து வருகின்றனரே! பண்டு தொட்டு நம் தமிழகத்தில் ஆரியத்திற்கும், ஆங்கிலத்திற்கும், ஆந்திரத்திற்கும், இந்திக்கும் ஆக்கந்தேடிய கூட்டத்தவரே அதனல், பணம், பட்டம், பதவி, வாழ்வு பெற்றவர்களே இன்று பல்கலைக் கழகங்களிலும், அரசுகளிலும், பத்திரிகைகளிலும், வணிக நிலையங்களிலும் ஆட்சியிலிருந்து கொண்டு நம் தமிழ் மொழியைத் தலை எடுக்காவண்ணம் செய்துவருகின்றர்கள்.

இவர்களிற் பலர்-மிகப் பலர் முன்பு ஆங்கில ஆட்சியினைப் போற்றிப் புகழ்ந்து பாடியவர்களே! இன்று அவர்கள் கூட்டத்தில் ஆங்கில, இந்தி ஆக்கத்திற் சேர்ந்துகொண்டு தமிழை ஒடுக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருப்பவர்களில் காந்தியடிகளின் நாட்டுரிமைப் போரில் கலந்துகொண்டவர்களும் உண்டு; அதை நினைக்கையில் வருத்தமாக இருக்கின்றது. அதற்குக் காரணம், அவர்களிற் பெரும்பாலார் தமிழிலக்கியங்களைக் கற்காது ஆங்கிலமோகத்தில் ஆழ்ந்தவர்களே என்பது விளங்குவதாகும். தமிழ்ச்சொற்கள் என்றலே இவர்கட்கு வேம்பு. இவர்களும் நம்மை-தமிழ் உரிமை நாடுவோரை 'வெறியர்கள்' என்று கூறுவது தான் வியப்பிலும் வியப்பாகும்.

புத்தொளி

நம் பாரதநாடு உரிமைபெற்று விட்டது. காந்தியடிகளின் அறப்போர் வென்றுவிட்டது. ஆங்கிலர் ஓடிவிட்டனர். அவர் தம் மொழிக்காக அவர்க்கு மேலாக ஊக்கங்கொண்டு ஆக்கந்தேடும் அடிமை இருள் தேய்ந்திடும் வண்ணம் எங்கும் தமிழ் உணர்ச்சி உரிமை என்னும் ஞாயிறு தோன்றிவிட்டது. அதன் புத்தொளி யாண்டும் பரவலாயிற்று.

''விரைவில் – மிகவிரைவில் தமிழகத்தில் ''எங்கும், எதிலும் தமிழே'' என்ற உரிமை ஆட்சி புரியப் போகின்றது. அதற்

(6-ம் பக்கம் பார்க்க)

இன்பத் தமிழிருக்க, ஆங்கிலம் எதற்கு?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

குழைப்பதே இன்று நம்முன்னுள்ள பணியாகும். இந்நிலை தமிழுக்கேற்பட்டால்தான் தமிழிலக்கியங்கள் வாழும். தமிழின்பச் சுவையை-அறிவைத் தமிழர்கள் பெறுவர். தமிழினம் ஓங்கும், இயற்கை உரிமை இன்பத்தை எய்தும்.

ஓர் எச்சரிக்கை

பிறமொழி ஆதிக்கத்தால் பிற மொழிச் சொற்கள் ஒரு மொழியில் ஏராளமாய்க் கலக்கும். நாளடைவில் பிற மொழித் தொடர்களும், மரபுகளும் கலக்கும். இறுதியில் கலப்புற்ற மொழி அழியும். இது வரலாறு கண்ட உண்மை. இவ்வுண்மையை வடமொழிக்கலப்பொன்றினலேயே தமிழ் ஒன்றே மலையாளம் முதலிய மொழிகளாக மாறிய செய்திகளை மேலே பார்த்தோம்.

ஆதலினல், தமிழ்மொழியை-இலக்கியத்தை-இனத்தை வாழ வைப்பது தனித்தமிழ் ஒன்றேயாகும். இதனை உணரும் தமிழர் ஒவ்வொருவரும் தனித்தமிழ் பேணலைத் தம்முயிரைப் பேணுதலினுங் கருத்தூன்றி யிருத்தல் வேண்டும்.

இன்றியமையாத – மொழி பெயர்க்க வியலாத சில பிற மொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளுதல் தனித் தமிழ்க் கோட்பாட்டுக்கு மாறுனதன்று. ஆனல். அதை முடிவு செய்யக் கூடியவர்கள் தனித் தமிழில் நம்பிக்கை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

இதுபோலவே நம் பாரதக் கூட்டரசின் பொதுநலன்கட்காக இந்தி பொதுமொழியாக இருக்கலாம். ஆனலது மொழி நாடுகளின் ஆட்சிமொழியாகவோ-ஆதிக்க மொழியாகவோ-பள்ளிகளில்-கல்லூரிகளில் கட்டாய மொழியாகவும், கலைகளைக் கற்பிக்கும் பொது மொழியாகவும் இருத்தல் கூடாது. மொழி நாடுகளின் தொடர்புக்கும்-கூட்டரசின் தொடர்புக்கும், படைக்கும் மட்டுமே இந்தி பயன்படுத்தலாம். இப்பணிகளுக்கு ஒரு சில நூற்றுவர்கள் போதும். படைக்குச் சில பல ஆயிரவர் போதும். அத்துறையிலுள்ளவர்கள் மட்டும் இந்தியில் தனிப் பயிற்சி பெற அரசு வசதி செய்தாற் போதும்.

இச்சிறு தொகையினருக்காக நான்கு கோடி தமிழ் மக்களும் கட்டாயமாக இந்தி படிக்கத் தேவையில்லை. படித்தாலும் பயனும் இல்லை. நான்கு கோடி பேரும் கூட்டரசில் பணிபுரியப் போவதுமில்லை. நாடு சுற்றவும் முடியாது. சில ஆயிரவர்க்காகக் கோடிக் கணக்கானவர்கள் இந்தியைக் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று சட்டஞ் செய்வது மக்களாட்சியாகாது. ஒரு சிலரின் அரசியல் பணிகளுக்காகக் கோடிக் கணக்கானவர்கள் இந்தி படிக்கச் செய்வது தீய விளைவுகள் பலவற்றை ஏற்படுத்தும். அவற்றுள் தலையாயது தமிழ்மொழியை மதியாமையும், இந்திமொழிச் சொற்கள் தமிழ்ச் சொற்களை அழிக்கவும் உதவும். நாளடைவில் இந்திக்கு வடமொழி, ஆங்கிலத்திற் கேற்பட்ட ஆக்கமுந் தமிழ்மொழிக்குத் தாழ்வும், அழிவுமேற்படும். பழையபடி இன்றுள்ள அவலநிலை தமிழுக்கேற்பட்டு ''மெல்லத் தமிழினிச் சாகும்'' என்ற நிலையுமேற்படும்.

ஆங்கிலம் போகட்டும்

நம் பாரத நாட்டில் ஆங்கிலம் எந்தமொழி நாட்டாருக்குந் தாய் மொழியல்ல. ஆதலினலது பொதுமொழியாவதற்கு முடியாது. மேலுமது ''உயர்ந்தது; தனிச்சிறப்புடையது; அஃதில்லாமல் அறிவுகூடாது; வளராது'' என்ற ஆங்கில மோகர்களின் மூட நம்பிக்கை ஒழிந்தே யாகல் வேண்டும். இம்மூட நம்பிக்கையை வைத்துக்கொண்டு தாய்மொழிகளின் உரிமையை-தன்மானத்தைப்-பெருமையை – வளர்ச்சியை உண்டாக்க முடியாது. நாட்டினரின் தன்னம்பிக்கையும், முயற்சியும், தன்னறிவின் வளர்ச்சியும் உயராது.

பிறமொழிகளின் ஆதிக்கத்தை எதிர்ப்பதேன்?

ஆங்கிலம், ஆந்திரம், இந்தி, ஆரியம் முதலிய மொழிகளின் ஆக்கம் அவ்வந் நாட்டிற் குரித்தானதே. ஆனல், அவைகட்கு நம் தமிழ் நாட்டில் நாமேன் ஆக்கமும் முதலிடமுந் தருதல்வேண்டும். அப்படி அவற்றிற்கு நந்தமிழகத்தில் ஆக்கமும், உரிமையும் தந்தமையாலன்றே நந்தமிழ்மொழி இன்று தாழ்ந்து தலை குனிந்து சொந்த நாட்டிலேயே மதிப்பிழந்து அடிமைக் கொடுமையில் உழல்கின்றது. இந்நிலையில் தமிழிலக்கிய வளர்ச்சியும், வாழ்வும் எங்ஙனங் கூடும்? தமிழினம் எவ்வாறு உயரும்? உலகில் மானத்துடன் தானும் ஓர் நாகரிக இனமென்று தலைநிமிர்ந்து நிற்கும்? ஆகவே, தான் பிறமொழிகட்குத் தமிழ் நிலத்தில் உரிமையும், ஆக்கமுந் தருதல் தவறுகும் என்று கூற நேர்கின்ற தன்றி அயல்மொழிகளின்பால் தமிழ் மக்களுக்கு எட்டுணையும் வெறுப்போ-மதிப்புக் குறைவோ இல்லை. இல்லை. பிற மொழிகளின் செல்வங்களைத் தமிழிற் கொணரவும், பிறநாடுகளுடன் நட்புறவு கொள்ளவும் அறிஞர் சில்லாயிரவர்-பல்லாயிரவர் கட்கும், தேவையானவர்கட்கும் பிற மொழிகளை அரசு வழங்கலாம். ஆங்கில நாட்டவர் அவ்வாறு தானே செய்கின்றனர்! அவ்வெளிய வழியை விட்டு நாலு கோடி தமிழ் மக்களும் ஆங்கிலம், இந்தி வடமொழி முதலிய மொழிகளைக் கற்கக் கட்டாய மாகச் சட்டஞ்செய்வது தமிழையும், தமிழிலக்கியங்களையும், தமிழினத்தையும் அழித்தொழிப்பதிலேயே கொண்டு முடிக்கும். மொழி வரலாறு, இவ்வுண்மையை உணர்த்திய பிறகும் தமிழ் மக்கள் வாளாவிடப்பரோ?

ஆகவேதான், நம் தமிழரசுக் கழகம், தமிழ்மொழியை-அதனிலக்கியங்களைத் தமிழ்க்கலைகளை-தமிழினத்தைக் காக்க இலக்கிய மாநாட்டினைக் கூட்டியிருக்கின்றது. அதற்காகவே ஆர்வத்துடன் கூடியுள்ள இம்மாநாட்டினை யான் பேரார்வத்துடன் தமிழ் வாழ்க! என்று சொல்லித் திறந்து வைக்கின்றேன்.

நன்றி கூறல்

ஆரியம், ஆங்கிலம், ஆந்திரம், இந்தி முதலிய மொழி பேசுவோர்களைக் காட்டிலும் அம்மொழிகளின் வளர்ச்சிகட்காகத் தாய்மொழியாகிய நம் தமிழ்மொழியைத் தலை எடுக்கவொட்டாமல் தாழ்த்திவரும் பெற்ற தாயைக் கொலை செய்யும் கொடியவர்களிற் கொடியவர்களான தமிழர் பலர்,தமிழ்நாட்டில் ஆக்கம் பெற்றுள்ளனர். அவர்களும் நம்மவர்களே தமிழர்களே என்பதை எண்ணுங்கால் ''உடன் பிறந்தே கொல்லும் வியாதி'' என்ற பழமொழி நினைவுக்கு வருகின்றது. வருத்தம் பொங்குகின்றது. எல்லாம் அடிமைத் தனத்தால் நேர்ந்த அலங்கோலம் என்றெண்ணி அவர்களை மன்னிப்போமாக. அன்பினல் அரவணைப்போமாக. இவைதானே நந்தமிழ்ப் பண்பாடு!

இவ்வரிய பண்பாட்டினை இயல்பாகப் பெற்றுள்ள ம.பொ. சிவஞானம் அவர்களை நந்தமிழகமும், நாமும் தலைவராகப் பெறப் பெரும்பேறு செய்துள்ளோம். அவர் தோன்றியிரா விட்டால் இன்று தமிழ்மொழியும், தமிழினமும் தம் உரிமைக்காகப் போராடி வாகைசூடியிருக்குமா? ஆதலின், அச்சான்றோர் நெடிதினிது வாழ்க! வாழ்க! என நாடொறும் நான் செய்யும் சிவபூசையில் சிவபெருமானை இறைஞ்சுகின்றேன். அவ்வாறே தொண்டே இன்பமெனக் கொண்டு தன்னலத்தை அறவே மறந்து அயராதுழைக்கும் நம்மினிய நற்கவிஞர் ஷெரீப், கலிவரதன் போன்ற எண்ணற்ற நற்றொண்டர்கள் வாழி வாழி என இறைவனை இறைஞ்சுகின்றேன். தமிழ் வாழக் குழுமியுள்ள அனைவர்க்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழ் வாழ்க!

*

திரு. முத்தையாவின் தந்தை மறைவு

தமிழரசுக் கழக மத்திய செயற்குழு உறுப்பினரும் பேச்சாளருமான திரு. மா. முத்தையா பி. ஏ. அவர்கள் தந்தையார் மாணிக்கம் செட்டியார் 12-1-62 காலை 8 மணிக்கு காரைக்குடியிலுள்ள தம் இல்லத்தில் காலமானர் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வேலூர் மாநாட்டிற்கு வந்து மகிழ்ச்சியுடன் தம் சகாக்களுடன் ஒத்துழைத்து மாநாட்டைச் சிறப்பிக்க இருந்த தருணத்தில் தந்தையை இழந்தார் திரு. மா. முத்தையா. அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தேசபக்தர் சோமயாஜுலு மணிவிழா மலர்

திரு. சோமயாசுலு, பழம் பெரும் தேசபக்தர்களில் ஒருவர். வ. உ. சிதம்பரனர், திரு. வி. கலியாணசுந்தரனர் போன்ற பெருந்தலைவர்களோடு நெருங்கிப் பழகும் பேறு பெற்றவர். கம்ப ராமாயணம் போன்ற தமிழ் இலக்கிய நூற்களில் பற்றுடையவராதலால் ரசிகமணி, கவிமணி, போன்ற தமிழ்ப் புலவர்களோடு தொடர்பு கொண்ட பேறுடையவர். விடுதலைப் போரில் ஈடுபட்டு பலமுறை சிறை சென்ற பெருமைக்குரியவர். ஒரு காலத்தில் காங்கிரசின் பிரசார பீரங்கியாக இருக்கும் சிறப்புப் பெற்றவர். சட்டசபையில் அங்கம் வகித்து, நாட்டின் புனரமைப்பில் பங்கு கொள்ளும் பாக்கியம் பெற்றவர். தொழிலாளர் தலைவராகத் திகழ்ந்து, அவர்கள் நலங் கருதிப் பாடுபடும் தொழிலாளர் தோழர்.

இவ்வளவு சிறப்புகளுக்குரிய திரு. சோமயாசுலு அவர்கட்கு அறுபதாமாண்டு நிறைவு விழா, 5-1-62ல் திருநெல்வேலி மாகாண்புரத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் வெளியிடப்பட்ட மணிவிழா மலர் நமது பார்வைக்கு வரப் பெற்றோம்.

மலர் சிறந்த முறையில், விளம்பரங்களைக் கொண்டு பக்கங்களைப் பெருக்கி, மலரின் மணத்தைக் கெடுக்காமல், விஷயதானங்களை மட்டுமே தாங்கி வெளிவந்திருக்கிறது. முகப்பில், சோமயாசுலுவின் அழகிய படம் காட்சியளிக்கிறது. நாமக்கல் கவிஞர், ம. பொ. சி., ஏ. என். சிவராமன், வெ. சாமிநாதசர்மா, பரலி சு. நெல்லையப்பர், கொத்தமங்கலம் சுப்பு ஆகியோரின் கட்டுரைகள் மலரை அலங்கரித்து, மணிவிழா நாயகரின் பெருமை பேசுகின்றன. மலரைத் தயாரித்த பெருமை ஆக்கவழியில் பாடுபடும் ஆற்றல் பெற்ற ஆக்கூர் அனந்தாச்சாரியாருடையதாகும்.

பக்கங்கள் 64. விலை ரூ. 2.

நமது முழக்கம், 'தமிழினமே ஒன்றுபடு!'

[2ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு இனத்தின் விடுதலைக்குப் பாடுபடும் கட்சி அந்த ஒன்றைத் தவிர, அதற்குக் கேடு சூழத்தக்க வகையில் வேறு விஷயங்களில் தலையிடக் கூடாது. தலையிடுவதானலும் கருத்தை வெளிப்படுத்தும் அளவில் அன்றி, கிளர்ச்சி அல்லது போராட்டம் போன்ற தீவிர நடவடிக்கைகளில், இறங்கக் கூடாது. திராவிடர் கழகமோ 'சீர்திருத்தக் கிளர்ச்சி' என்ற பெயரால் மக்களுடைய உணர்ச்சிகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் நடைமுறை அனுஷ்டானங்களுக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்து வருகிறது. வகுப்புவாத ரீதியில் தமிழினத்தைப் பிளவுபடுத்திப் பிரசாரம் செய்துவருகிறது. அதனல் தமிழினத்தவரை ஒன்றுபடுத்தி அவர்களை உரிமைப் போரில் ஈடுபடுத்த கடந்த முப்பது ஆண்டுகளாக பெரியார் ஈ. வெ. ரா. வால் முடியவில்லை. சீர்திருத்த உணர்ச்சி காரணமாக பெரியாரின் சில பல கொள்கைகளை நான் ஆதரிக்கமுடியும். அவற்றிற்கு வெற்றி தேட நமது கழகத்தையும் நேரடிக் கிளர்ச்சியில் ஈடுபடுத்தமுடியும். ஆனல், அதற்கப்புறம் உருப்படியாக என்னல் எதுவும் செய்ய முடியாது. மக்களுடைய வெறுப்பையும் எதிர்ப்பையும் சமாளிப்பதொன்றே பெரிய பிரச்னையாகி விடும்.

தமிழினத்திற்கு உரிமை தேடப் பாடுபடும் எந்த ஒரு இயக்கமும் அந்தப் போக்கில் செல்லக் கூடாது. அதனல் தமிழரசுக் கழகமும் செல்லவில்லை.

நமது கழகம் தமிழினத்தின் விடுதலை இயக்கமென்றல், அரசியல் சட்டம் ஏற்காத-அதற்கு-எதிரான பிரிவினையை அல்லது பிரியும் உரிமையைக் கோரும் கட்சியல்ல. ஆகவே, நாம் விரும்பினல் தேர்தலுக்கு நிற்கத் தடை எதுவும் இல்லை.

நாம் தேர்தலுக்கு நிற்கும் காலம் எது? 1967-ம் ஆண்டு தேர்தலாக இருக்கும். அதற்குள் திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்டு மாநில சுயாட்சி பெற தி. மு. க. வினர் நம்மிடம் வருவார்கள். அவர்கள் மனமாற்றம் அடையும் காலம் வரும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. நண்பர் சம்பத் மனமாற்றம் அடைந்ததே அதற்குச் சான்று. இன்னும் இரண்டொரு ஆண்டிற்குள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் மறைமுகமான ஆதரவைப் பெற்று காங்கிரஸ் அல்லாத கட்சிகள் எல்லாமே ஒன்று கூடி மாநில சுயாட்சிக் கிளர்ச்சி நடத்த முடியுமென்று நம்புகிறேன். நான் நம்புவது நடந்து அல்லது வேறு வழிகளிலேனும் மத்தியிலுள்ள அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு ஆளுங்கட்சி இசைந்தால், 1967-ம் ஆண்டில் மக்களுடைய வாழ்க்கைப் பிரச்னைகளை ஒட்டிய தேர்தல் பிரகடனத்தை வாக்காளர் முன்வைத்து தமிழரசுக் கழகம் போட்டியிடும்.

இந்தப் பொதுத் தேர்தல் முடிந்ததும் ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி ஆரம்பம் ஆகும்.

எனது தோழர்களுக்கு நான் தரும் பொங்கல் செய்தி இது தான்.

தமிழரசுக் கழகம் தமிழினத்தின் விடுதலை இயக்கம் என்பதை உணர்ந்து, அதனை இதயத்தில் பதியவையுங்கள். அத்தகைய இயக்கம் இன்னொன்று இல்லை என்பதையும் திடமாக நம்புங்கள். தமிழினத்திற்கு விடுதலை கோரும் எந்த ஒரு இயக்கமும் தமிழர் எல்லோரையும் ஒன்றுபடுத்தும் குறிக்கோளுடன் செயல்படவேண்டும் என்பதை மறவாமல் மனதில் வையுங்கள். பிற கட்சிகளோடு நாம் கருத்துப்போர் நடத்துவதாயினும், அவர்களுடைய உள்ளங்களைத் திருத்தவேண்டுமென்ற நல்லெண்ணத்துடனே யேநடக்கவேண்டும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

இந்தப் பொங்கல் திருநாளில் நான் ஓதும் மந்திரம் இதுதான்:

தமிழரசுக் கழகத்தாராகிய நமக்கு யாரும் பகைவரல்லர்; நாமும் யாருக்கும் பகைவரல்லோம். நம் மனத்தில் சாதி-சமய-கட்சிக் காழ்ப்புகள் இருந்திருக்குமானல், பதவி ஆசை என்னும் அழுக்குப் படிந்திருக்குமானல், அவற்றை எல்லாம் நேற்றுக்காலையே பொங்கித்தீயில் போட்டுப் பொசுக்கிவிட்டோம் என்று உலகறியச் சொல்லுங்கள்.

இன்றைய பொங்கல் திருநாளில் தூய உள்ளத்துடன், அன்பு பொங்கிஎழ 'தமிழினமே ஒன்றுபடு' என்று ஒலி எழுப்புங்கள்.

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டு சிப்பாய்களை சித்திரவதை செய்து அவர்களையெலாம் கொன்று குவித்த வெள்ளை தளபதிகளுக்கு ஞாபகச்சின்னங்கள் அமைத்திருக்கின்றது. அவற்றை இந்தக் கோட்டையின் எதிரிலேயே காணலாம். நாடு சுதந்திரம் பெற்று ஆண்டுகள் பதினைந்து ஆகியும் வேலூர் புரட்சியில் ஈடுபட்ட இந்திய சிப்பாய்களுக்கு இதுவரை ஞாபகச் சின்னம் எழுப்பவில்லை.

அப்படியே கோட்டைக்கு உள்ளே இருக்கும் கலைக் கோயிலை-வெறுங்கோயிலை மீண்டும் மக்கள் சென்று வணங்கும் கடவுள் கோயிலாக்க வேண்டும் என்பது மக்களின் ஏகோபித்த எண்ணம். இந்த இரண்டு பிரச்னைகளிலும் நமது அருமைத் தலைவரின் கருத்தை, இந்த மாநாட்டின் ஆதரவான தீர்மானத்தை வேலூர் நகர மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதை நினைவூட்டி, மீண்டும் உங்கள் அனைவரையும் வருக! வருக! என வரவேற்கிறேன்.

''தமிழர் திருநாளி''ல் சர்வ கட்சி ஒற்றுமை!

அமைச்சர் சி. எஸ். நூல் வெளியீடு- திரு எஸ். எஸ். வாசன் சாதனை!

தைத் திங்கள் முதல் நாள், தமிழர் திருநாள்! தமிழர் தலைவர்களெல்லாம் ஒருங்கிருந்து உண்டு, உரையாடி, மக்களுக்கு அறிவுரை கூற வேண்டிய புனித நாள்! ஆனல், கடந்த ஆண்டுகளில் அப்படி எதுவும் நிகழவில்லை. ஆம், பொங்கல் திருநாளில் தமிழர் தலைவர்கள் ஒன்று கூடவில்லை; உடனிருந்து உண்ணவில்லை; ஒற்றுமையுடன் வாழுமாறு மக்களுக்கு உரை பகர வில்லை! காரணம், கூட்டுவாரின்மைதான்!

இந்த ஆண்டு, ஜெமினி அதிபர்-ஆனந்த விகடன் ஆசிரியர் எஸ். எஸ். வாசன் பொங்கல் விழாவிலே புதுமை கண்டார்! காங்கிரஸ், த.அ.க., தி.மு.க. தலைவர்களை ஓரிடத்தில் கூட்டி வைத்தார்! அவர்கள் ஒரே வரிசையில் அமர்ந்து, சர்க்கரைப் பொங்கல் உண்ணும்படி செய்தார்! பின்னர், ஒரே மேடையில் இருந்து, ஒருவர் பின் ஒருவராக, ஒரே குரலில் பேசும்படிச் செய்தார், இவ்வளவும், தேர்தல் சூடு பிடித்திருக்கும் நேரத்தில் நிகழ்ந்த காட்சிகள்! காட்சி நிகழ்ந்த களம், 'ஆனந்த விகடன்' அலுவலகம். நிகழ்ந்த காரணம் ''நான் சென்ற சிலநாடுகள்'' என்ற பெயரில் கல்வி அமைச்சர் எழுதிய நூலின் வெளியீட்டையொட்டியதாகும். காரணம் எது வாயினும், கண்ட காட்சி ஒற்றுமையே!

இடம் பெயர்ந்த பெருமையிலே காலைக்கதிரவன் எழுச்சி கொள்ளும் தருணத்திலே அதாவது, காலை 8 30 மணிக்கு 'ஆனந்த விகடன்' அலுவலகத்தில் 'பொங்கல் மணம்' கமழ்ந்தது. அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் எழுத்தாளர்களும் ஒருவர் பின் ஒருவராக வந்த வண்ணமிருந்தனர். அனைவரையும் அலுவலகத் தலைவாயிலில் நின்று இன்முகங் காட்டி வரவேற்றார் எஸ். எஸ். வாசன்.

பின்னர், நடந்த பொங்கல் விருந்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னள் துணை வேந்தர் டாக்டர் சி. பி. இராமசாமி (ஐயர்), இந்நாள் துணைவேந்தர் வி. சுப்பிரமணியம் (நாடார்), நீதிபதி கைலாசம்,மாவட்ட நீதிபதி சாமசாமி, கல்வி-நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஓ. வி. அளகேசன், தமிழரசுக்கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், தி. மு. கழகப் பிரமுகர் க. அன்பழகன், கலைஞர் தி. க. சண்முகம், தி. க. பகவதி, அ. ச. ஞானசம்பந்தம், வடபாதிமங்கலம் தியாகராய முதலியார், திருவாட்டி சௌந்தரம் கைலாசம் ஆகியோர் விருந்தில் கலந்து கொண்டனர்.

விருந்துக்குப் பிறகு அனைவரும் கலையழகு நிரம்பிய இயற்கை எழிலொழுகும் பந்தலின் கீழ் எல்லோரும் குழுமினர். திருமதி எம். எல். வசந்தகுமாரி இறைவணக்கம் பாடிய பின்னர், திரு. எஸ். எஸ். வாசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். இந்த 'ஒற்றுமை' விழாவின் தலைவர் டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர், நகைச்சுவை நிறைந்த தலைமையுரை நிகழ்த்தினர். அவர் கல்வி அமைச்சர் பற்றி கூறுகையில், ''ஒரு சமயம் பல்கலைக் கழகத்தின் பக்கம் இருக்கிறர்; இன்னொரு சமயம் அதற்கு எதிராகச் செயல் படுகிறர்'' என்றர். சர். சி. பி. ஆங்கிலத்தில் பேசினர். ஆம்; தமிழர் திருநாளில், ;தமிழ் நூல் வெளியீட்டு விழாவில் தலைமையுரை ஆங்கிலத்தில்! இது ஒன்றே விழாவில் காணப்பட்ட குறை!

பின்னர், திரு. சுப்பிரமணிய நாடார் ''நான் கண்ட சில நாடுகள்'' என்ற நூலை வெளியிட்டுப் பேசினர். ஆங்கிலத்திற்கு அடிமைப்பட்ட தலைமுறையைச் சார்ந்தவராயினும், தான் மட்டும் விலக்கல்ல என்பதனைக் காட்டுவதுபோல அழகியதமிழில் பேசினர்.

திரு. ம. பொ. சிவஞானம், தாம் துவக்கி வைத்த தமிழர் திருநாள், தமிழினத்தின் ஒற்றுமைக்கான தேசியத் திருநாள் தாம் எண்ணியாங்கு இந்த ஆண்டில் நிகழ்வது கண்டு பெருமிதம் கொண்டவராகப்பேசினர்.

திரு. எஸ். எஸ். வாசன் அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி ஆண்டாண்டு தோறும் தமிழர் திருநாளன்று எல்லா சாதி சமய-கட்சித் தலைவர்களையும் அழைத்து அரசினர் விருந்து நடத்த வேண்டும் என வேண்டுகோள்விடுத்தார்.

அமைச்சர் சி. சுப்பிரமணியம் எழுதிய நூலைப் படிக்காமலே, அதிலுள்ள கருத்துக்களைத் தான் ஆதரிக்க முடியுமென்றர்.

''எனது நண்பர் சுப்பிரமணியம் பொய் கூறமாட்டார். ஒருக்கால் தம் கட்சியின் சாதனைகளைக் கூறும் போது மிகைப்படுத்தி கூறுவார்—அவ்வளவு—தான்!'' என ம. பொ. சி. கூறிய போது அவையினர் சிரித்து மகிழ்ந்தனர்.

திருவாளர்கள் க. அன்பழகன், செட்டி நாட்டரசர் எம். ஏ. முத்தையா செட்டியார், டாக்டர் மு. வரதராசனர், திருவாட்டி சௌந்தரம் கைலாசம் ஆகியோர் பேசியபிறகுஅமைச்சர் சுப்பிரமணியம் நன்றி தெரிவித்தார்.

அவர் ம.பொ.சி. பற்றிக் குறிப்பிடுகையில், என்பாலுள்ள அன்பாலும் நல்லெண்ணத்தாலும் நான் தவறு செய்வதாகத் தெரிந்தபோதும் 'சுப்ரமண்யம் அப்படிச் செய்யமாட்டாரே' என்று கூறுவார் நண்பர் ம.பொ.சி.'' என்று அன்புதும்பக் குறிப்பிட்டார்.

திரு. கொத்தமங்கலம் சுப்பு நன்றி தெரிவித்துப் பேசினர்.

'நான் கண்ட சில நாடுகள்' என்ற நூல் ஒரு ரூபாய் குறைந்த விலையில், அழகிய அட்டையையும் உயர்ந்த காகிதத்தையும் கொண்டு 'ஆனந்த விகடன்' அலுவலகத்தாரால் வெளியிடப் பெற்றுளது. படிக்கவேண்டிய சிறந்த நூல்.

தமிழர் திருநாள்

சென்னை கொத்தவால்சாவடி வர்த்தககலா மன்றத்தின் சார்பில் 28-1-62 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு அண்ணுப் பிள்ளை தெருவில் ''தமிழர் திருநாள்'' பொதுக் கூட்டம் நடைபெறும்.

தலைவர்: பெ. நடராசன்
பேசுவோர்: ம. பொ. சி.
பொதுச்செயலாளர்
கவி. கா. மு. ஷெரீப்
சு. வேங்கடராமன் பி. ஏ.
சை. அரங்கநாதன்
பட்டுக்கோட்டை ராசகோபால்
மற்றும் பலர்.

காலை 10 மணிக்கு ந. சண்முகம் தலைமையில் உசிலை. த. சோமநாதன் கொடி யேற்றுவார். எம். முனுசாமி தலைமையில் உணவு வழங்கப்படும்.

பதிவு எண். எம. 5687.

தமிழரசுக் கழக நான்காவது மாநில மாநாடு

வேலூர் (வ. ஆ.) காந்தி திடலில்
''பாரதி பந்தலி''ல் நடைபெறும்.

பிரதிநிதிகள் மாநாடு

19-1-62 வெள்ளி காலை 9க்கு

(தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை
'கடம்' பாலச்சந்திரன்
இயக்கப் பாடல்கள் பாடுவார்.

3 மணி முதல் 4 மணி வரை
குருவாயூர் பொன்னம்மாள்
இசை நிகழ்ச்சி.

மாநிலசுயாட்சி மாநாடு

மாலை 4 மணிக்கு
தலைவர்: கவி. கா. மு. ஷெரீப்
பேச்சாளர்கள்:
திரு. ப. ஜீவானந்தம்
,, ஈ. வே. கி. சம்பத் எம்.பி.
டாக்டர் எஸ். விஜயலக்ஷ்மி
எஸ். கே. பாலசுப்பிரமணியம் எம். ஏ., பி. எல்.
திரு. கோ. கலிவரதன்
அவ்வைநாதன் பி. ஏ.
,, சு. வேங்கடராமன் பி.ஏ.
திரு. ம. பொ. சிவஞானம்

இரவு 9 மணிக்கு
கலைஞர் ஏ. பி. நாகராசன் தலைமையில்
நகைச்சுவை நடிகர் தங்கவேலு குழுவினர்
நடிக்கும்
''மனைவியின் மாங்கல்யம்''

இலக்கிய மாநாடு

20-1-62 சனி காலை 9 மணிக்கு

திரு. பட்சி ராசகோபாலன்
பி. எஸ். சி., பி. எல்., எம். சி.
தலைமையில்

மாபெரும் ஊர்வலம்

முற்பகல் 11 மணிக்கு மாநாடு
தலைவர்: கலைஞர் தி. க. சண்முகம்
திறப்பாளர்: மறை திருநாவுக்கரசு

பேச்சாளர்கள்:
திரு. ச. சிவகுமாரன் எம். ஏ.
,, மு. அரவாண்டி எம். ஏ.
,, திருலோக சீதாராம்
,, புலவர் புவியரசு
,, புலவர் கீரன்
,, காரைக்குடி தேவராசன்
,, அ. ச. ரகுநாயகம் எம். ஏ.
,, 'சின்னக் கலைவாணர்' ராஜகோபால்
,, ம. பொ. சிவஞானம்

இடைவேளை
பிற்பகல் 3 முதல் 4 வரை
தடாரி புகழ்
டேப் வேங்கடாசலம்
இசை நிகழ்ச்சி

இரவு 9 மணிக்கு
ஔவை தி. க. சண்முகம் தலைமையில்
மனோகர் குழுவினர் நடிக்கும்
''சாணக்கிய சபதம்''

தமிழரசுக் கழக மாநாடு

21-1-62 ஞாயிறு காலை 9க்கு

தலைவர்:
திரு. ம. பொ. சிவஞானம்

கொடியேற்றுபவர்:
சு. வேங்கடராமன் பி. ஏ.

திறப்பாளர்:
கலைக்காவலர் எம் ஏ வேணு

தியாகிகள் சின்னம் திறப்பு:
கோ. கலிவரதன்

பேச்சாளர்கள்:
வே. கி. குப்புசாமி, குடந்தை பாலு, கவிஞர்கள்: கு. சா. கிருஷ்ணமூர்த்தி, கு. மா. பாலசுப்பிரமணியம், உசிலை சோமநாதன், திருத்துறைப்பூண்டி கா. இராமச்சந்திரன், கோவை ஈசுவரன், ஞானமணி, மதுரை கல்யாணசுந்தரம் பி. ஏ. பி. எல்., பர்மா பிரதிநிதி அசாத் க. இராமசாமி, ஞானதாசன், கள்ளக்குறிச்சி ஜனார்த்தனம், பழனி மாரிமுத்து, சேலம் ஆ. சின்னையன், காரைக்குடி மா. முத்தையா பி. ஏ., சிதம்பரம் பா. சுப்பையன், திருப்பூர் அங்கப்பன் பி. ஏ. பி. எல்., காளிமுத்து பாண்டியன், வேலூர் கிருஷ்ணமூர்த்தி, அ. பாபநாசம் பி. ஏ. பி. எல்., கவிஞர் தன்னரசு, அமர அண்ணல், முத்துலக்கையன், வையகம், பட்டுக்கோட்டை ராஜகோபால், மதுரை திருவாட்டி வீரலட்சுமி உடையப்பா, மதுரை-மு. மாரியப்பன் பி. எஸ் சி., பி. எல்., சை. அரங்கநாதன், மு. நா. பெருமாள், அருமைநாதன்.

இரவு 9 மணிக்கு
டி. கே. எஸ். சகோதரர்கள் நடிக்கும்
''ஔவையார்''

பிரவேசக் கட்டணம்

நாடக நிகழ்ச்சிகளுக்கு மட்டும்

தினசரி:
ஆண்களுக்கு ரூ. 1.
பெண்களுக்கு 50 காசு.

மூன்று நாட்களுக்கும்:
ஆண்களுக்கு ரூ. 2–25
பெண்களுக்கு ரூ. 1

வரவேற்புக் குழுவினர், 54, காந்தி சாலை, வேலூர், (வ. ஆ.)

ஆசிரியர்: ம. பொ. சிவஞானம், 1-29, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. தமிழ்நாடு.
அச்சிட்டவர்: பி. ராதாகிருஷ்ண செட்டியார், ராயல் பிரிண்டிங் ஒர்க்ஸ், 11-ஏ, மவுண்ட் ரோடு, சென்னை-2